முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No. 170 / 2013

23.04.2019

வா.சா.1 : பெயர் : பாலகுமார், த/பெ. தர்மலிங்கம்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1ம் பிரதிவாதி கல்லூரியில் எவ்வளவு மாணவர்கள் படித்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது, தோராயமாக 4000 பேர் படித்து வருகிறார்கள். அவ்வாறு படித்து வரும் மாணவர்களில் எத்தனை சதவீதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வெளியே செல்கிறார் என்ற விவரத்தை சொல்ல முடியுமா என்றால் என்னால் இயலாது. 1ம் பிரதிவாதி கல்லூரிக்கு அருகிலுள்ளவர்கள் அதிகமாக படித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதி கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களை நான் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நான் சந்தித்துள்ளேனா என்றால் அந்த மாணவர்கள் எங்கள் ஊர் அருகில் இருப்பவர்கள் என்பதால் நான் அவர்களை சந்தித்துள்ளேன். 1ம் பிரதிவாதி கல்வி நிறுவனத்தில் படித்த மாணவரின் பெற்றோர் யாரேனும் ஒருவர் 1ம் பிரதிவாதி சம்பந்தமாக எழுத்து பூர்வமான புகார் என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி கல்லூரியில் படித்த மாணவர்கள் யாரேனும் வெளி மாநிலங்களுக்கு சென்று விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்ட விவரம் என்னால் சொல்ல முடியுமா என்றால் என்னால் சொல்ல முடியாது. ஆனால் மாணவர்கள் வெளி மாநிலத்தில் நடத்தும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வது தெரியாது. கல்லூரியில் படித்த மாணவர்கள் பல்கலைகழகத்தின் மூலமாக ரேங்க் பெற்ற விவரங்கள் தெரியுமா என்றால் பிளக்ஸ் பேனர் மூலமாக நான் தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி கல்லூரியில் படித்த மாணவர்கள் தங்க பதக்கம் வாங்கியுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. எத்தனை ஆசிரியர்கள் அந்த கல்லூரியில் பணி செய்து வருகிறார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, தோராயமாக சுமார் 400

பேர்கள் பணி செய்து வருகிறார்கள். கல்லூரி நிர்வாகத்தை பொறுத்து மேற்படி கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் யாரேனும் எழுத்து பூர்வமான புகார் ஏதும் கொடுத்தார்களா என்றால் எழுத்து பூர்வமாக கொடுக்கவில்லை, வாய்மொழியாக சொல்லியுள்ளார்கள். 1 ம் பிரதிவாதி என்னென்ன தீர்மானங்கள் போட்டுள்ளார்கள் என்ற விவரம் என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் டிரஸ்ட் சம்பந்தமாக தன்னிச்சையாக முடிவுகள் எடுத்து வருகிறார்கள் என்பதை பொறுத்து என்னுடைய பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் 2, 3 பிரதிவாதிகள் பேசிக் கொண்டதை சொல்லியுள்ளேன். 2, 3 பிரதிவாதிகள் பொதுவாக துறையூரில் வழக்கமாக கூடி பேசுவார்கள் அதை வைத்து தான் இதனை சொல்கிறேன். அவர்கள் இருவரும் சேர்ந்து என்னென்ன பிரச்சனைகளை எந்தெந்த தேதிகளில் பேசினார்கள் என்ற விவரத்தை என்னால் சொல்ல முடியுமா என்றால் இயலாது. தாவாக்கு முன்பு அவ்வாறு எப்பொழுது பேசினார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியாது. 1 பிரதிவாதியின் தீர்மான புத்தகத்தை நான் பார்த்ததில்லை. தீர்மான புத்தகத்தை பார்க்காமலேயே தீர்மானங்கள் போடப்பட்டதாக எதை வைத்து சொல்கிறேன் என்றால் 2, 3 பிரதிவாதிகள் இருவரும் பேசிக் கொண்டதை வைத்து நான் சொல்கிறேன். 1 ம் பிரதிவாதி டிரஸ்ட் ஆரம்பித்த தேதியிலிருந்து இந்த தாவா தாக்ல் செய்ததற்கு முன்பாக எத்தனை போர்டு மீட்டிங் நடந்தது பொறுத்தோ, என்னென்ன தீர்மானங்கள் போடப்பட்டது பொறுத்தோ எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி டிரஸ்ட் சம்பந்தமான அந்த காலத்தில் சுமார் 80 மீட்டிங் நடந்துள்ளது என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி டிரஸ்ட் சம்பந்தமான கூட்டங்கள் கூட்டவில்லை என்று நான் எதை வைத்து சொல்கிறேன் என்றால் 1 ம் பிரதிவாதி கல்லூரியில் பணிபுரியும் ஞானசேகர் என்பவர் பேப்பரில் எழுதிக் கொடுங்கள் என்று நிர்வாகம் கேட்டதாக அவர் என்னிடம் சொன்னதை வைத்து சொல்கிறேன். ஞானசேகர் என்பவர் 1 ம் பிரதிவாதி கல்லூரியில் கணக்காளாராக பணிபுரிந்து வருகிறார். ஞானசேகர் பேப்பரில் எழுதியதை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஆனால் அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் அந்த பேப்பரை வாங்கி

பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் டிரஸ்ட் கூட்டத்தை கூட்டவில்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. டிரஸ்ட் ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்களுக்கு எதிராக கல்லூரி நிர்வாகம் என்னென்ன செயல்களில் செயல்பட்டு வருகிறது என்பதை என்னால் சொல்ல முடியுமா என்றால் டிரஸ்ட் ஆவணத்தின் சரத்தில் சொல்லப்பட்டுள்ள சமூக நலனுக்கு எதிராக நிர்வாகம் செயல்பட்டு வருவதை சொல்லியுள்ளேன். சமூக நலன் என்று எதை சொல்கிறேன் என்றால் மாணவர்களுக்கு இலவசமாக கல்வி அறிவு புகட்டவேண்டும் மற்றும் மருத்துவ சேவை கொடுக்கவேண்டும் என்பதுதான். அவ்வாறு டிரஸ்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, அடித்தட்டு மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்று காட்டப்பட்டுள்ளது. 1 ம் பிரதிவாதி கல்லூரி நிறுவனமானது அரசு உதவி தொகை பெறுவதில்லை. டிரஸ்ட் சம்பந்தமான கல்லூரி நிறுவனங்கள் அனைத்தும் அரசு மானியம் அல்லாது, டிரஸ்ட்டே அந்த கல்லூரி நிறுவனங்களுக்குண்டான தொகையை உருவாக்கி கொள்ளுமா என்றால் ஆமாம். பல்கலைக்கழக விதிப்படி தான் 1 ம் பிரதிவாதியின் கல்லூரி நிர்வாகம் கல்வி கட்டணத்தை பெற்று வருகிறது என்றால் சரிதான். கல்லூரி கட்டணத்திற்கு மேல் அதிக கட்டணம் நிர்வாகம் வசூல் செய்து வருகிறது என்பதை எதை வைத்து சொல்கிறேன் என்றால் எனது மனைவியை சேர்த்தபோது, கல்லூரி கட்டணத்தை விட கூடுதலாக ரூ.1000/- மற்றும் நன்கொடையாக ரூ.25,000/- கொடுத்து சேர்த்தேன், அதற்கு ரசீதுகள் ஏதும் கிடையாது. அவ்வாறு கொடுத்தது 2010 ம் வருடமாகும். எனது மனைவியை கல்லூரியில் சேர்த்தபோது, புத்தக செலவுடன் சேர்த்து ரூ.50,000/-ஐ 1 ம் பிரதிவாதி கல்லூரியில் கட்டினேன். அதற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கல்வி கட்டணத்தை விட ரூ.1000/- கொடுத்தபோது, அது சம்பந்தமாக ஆட்சேபனையோ, புகாரோ கொடுத்தேனா என்றால் எதுவும் செய்யவில்லை. கல்லூரியில் எனது மனைவி B.Ed. படித்தார். அந்த படிப்பானது ஒரு வருட காலமாகும். எனது மனைவி வேலையில் இல்லை. 1 ம் பிரதிவாதி கல்லூரியானது கல்வி கட்டணத்தை விட அதிகமாக கேட்கிறார்கள் என்று அந்த கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் யாரும் என்னிடம் எழுத்து பூர்வமாக புகார்

கொடுக்கவில்லை. நான் அவ்வாறு கூடுதலாக தொகை கொடுத்தது சம்பந்தமாக 2010 ம் வருடத்திற்கு பின்பு உடனடியாக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உடனே தாவா தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. 2, 3 பிரதிவாதிகள், 1 ம் பிரதிவாதி டிரஸ்டில் எவ்வளவு தொகைகள் கையாடல்கள் செய்தார்கள் என்றால் கோடிக்கணக்கில் கையாடல் செய்திருப்பார்கள். எதை வைத்து இவ்வாறு நான் சொல்கிறேன் என்றால் 2, 3 பிரதிவாதிகள் அவ்வாறு கையாடல் செய்த பணத்தை வைத்து கல்லூரி அமைந்துளள இடத்திற்கு எதிரில் 380 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளார்கள், அதுவல்லாமல் வேறு நிலங்கள் அவர்கள் பெயர்களில் வாங்கியுள்ளார்கள். அவ்வாறு 2, 3 பிரதிவாதிகள் யார் யாரிடம் வாங்கினார்கள் என்பதை பொறுத்து தெரிந்து கொள்வதற்காக கிரய பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் கிரய பத்திரங்களை பார்த்ததில்லை, அவ்வாறு விற்ற நபர்கள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்கள் சொல்லி எனக்கு தெரியும். 2, 3 பிரதிவாதிகள் அவ்வாறு நிலம் வாங்கியது சம்பந்தமாக வில்லங்க சான்றிதழ் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, கைவசம் வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் ஒப்படைக்காததற்கு என்ன காரணம் என்றால் 2, 3 பிரதிவாதிகள் டிரஸ்ட் தொகை வைத்து அவர்கள் தனிப்பட்ட பெயரில் வாங்கியுள்ளார்கள் என்பதால் அதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. எவ்வளவு தொகை கொடுத்து, 2, 3 பிரதிவாதிகள் கிரயம் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது உறவினர்களிடம் வாங்கினதே டிரஸ்ட் காசோலை மூலமாக தான். எந்த சர்வே நம்பருக்குண்டான நிலங்களை 2, 3 பிரதிவாதிகள் டிரஸ்ட் காசோலை பயன்படுத்தி வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. டிரஸ்ட் பெயரில் ஏற்பட்ட சொத்துக்களை எனது உறவினர்களிடம் இருந்து வாங்கப்பட்டதா என்றால் அவ்வாறும் வாங்கப்பட்டுள்ளது. டிரஸ்ட் பெயரில் வாங்கப்பட்ட சொத்திற்கு உண்டான கிரய தொகையை டிரஸ்ட்டுக்குண்டான செக் மூலமாக கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. டிரஸ்ட் பெயரிலுள்ள சொத்துக்கள் மட்டும்தான் டிரஸ்ட் செக் மூலமாக வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் பெயரில் எவ்வளவு

சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சுமார் 20 லிருந்து 30 ஏக்கர் நிலங்கள் வாங்கப்பட்டுள்ளது. டிரஸ்ட்டுக்கும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல. டிரஸ்ட் சம்பந்தப்பட்ட வரவு செலவு கணக்குகளை நிர்வாக கூட்டத்தின் மூலமாக நிறைவேற்றவில்லை என்று நான் எதை வைத்து சொல்கிறேன் என்றால் ஆடிட்டர் உதவியாளர் கங்கா சொன்னதை வைத்து நான் சொல்கிறேன். டிரஸ்ட் அடிட்டர் தசரதன் அன்டு கோ ஆகும். டிரஸ்ட்டின் அடிட்டர் தசரதன் அன்டு கோக்கும், கங்காவுக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா என்றால் இல்லை, கங்கா என்பவர் கல்லூரியின் கணக்காளர். கங்கா என்பவர் 1ம் பிரதிவாதி கல்லூரியில் பணிபுரிந்து வந்தார், அவர் தற்போது பணியில் இல்லை. அவர் எந்த வருடம் வரை 1ம் பிரதிவாதி கல்லூரியில் பணிபுரிந்தார் என்பது எனக்கு தெரியாது. கங்கா என்பவர் 1ம் பிரதிவாதி டிரஸ்ட் நிறுவனம் நடத்தும் நிர்வாக கூட்டத்தில் கலந்து கொள்வாரா என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கல்லூரியில் நிர்வாக கமிட்டி என்பது உள்ளது. நிர்வாக கமிட்டிக்கு என்னென்ன அதிகாரம் உள்ளது என்பது எனக்கு தெரியாது. வரவு செலவு கணக்குகளை நிர்வாக கமிட்டி தான் பார்த்து வருவார்களா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வரவு செலவு கணக்குகளை பொறுத்து நிர்வாக கமிட்டி ஒப்புதல் கொடுக்கவேண்டுமா என்றால் எனக்கு தெரியாது. 2005 - 2006 முதல் 2011 - 2012 வரையுள்ள கணக்கு வழக்குகளை தசரதன் தான் ஆடிட் செய்து அரசாங்கத்திற்கு ஒப்படைத்தார் என்றால் கங்கா சொல்லி தெரியும், நேரடியாக தெரியாது. நான் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக கல்லூரி வரவு செலவு கணக்குகளை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் வரவு செலவு கணக்குகளை 1ம் பிரதிவாதி சரியாக ஒப்படைக்கவில்லை என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் கங்கா சொல்லி நான் தெரிந்து கொண்டேன். கங்கா எனக்கு உறவினர் கிடையாது. கங்காவை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் அவர் தற்போது உயிருடன் இல்லை. கங்காவிற்கும், எனக்கும் எந்த வகையில் பழக்கம் ஏற்பட்டது என்றால் அவர் டிரஸ்டடில் பணிபுரிந்தபோது அவருடன் எனக்கு

பழக்கம் ஏற்பட்டது. டிரஸ்ட் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் அந்த கல்லூரியின் நலனுக்காக வாங்கப்பட்டதா என்றால் அதற்காக தான் பயன்படுத்தப்படுகிறது.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.